# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | 2/2021 | **CNR No.** | **:** | TNKI13-000111-2020 |
| **Name** | **:** | சற்குணம் | **கணவர் பெயர்** | **:** | லேட். சகாதேவன் |
| **Witness for** | **:** | Defendant | **Calling** | **:** | DW1 |
| **Age** | **:** | 51 | **Village** | **:** | கீழ்மத்தூர் |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 3:07 PM | **End Time** | **:** | 4:15 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18.11.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

(1) வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வழி கேட்டு தாக்கல் செய்துள்ளார். பெருமாள், முருகேசன் மற்றும் சகாதேவன் யார் என்றால் சகாதேவன் எனது கணவர் ஆவார், பெருமாள் மற்றும் முருகேசன் எனது கணவரின் அண்ணன்கள் ஆவார்கள். எனது கணவர் சகாதேவன் எப்போது இறந்தார் என்றால் 19.01.2024 ம் தேதி இறந்தார். வாதி இந்த வழக்கை தாக்கல் செய்யும் பொழுது பெருமாள், முருகேசன் மற்றும் சகாதேவன் ஆகியோர்களுக்கு எதிராக தான் தாக்கல் செய்துள்ளார் என்றும் எனக்கு எதிராக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் இறப்பதற்கு முன்பு 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் வழக்கை நடத்தி வந்தார் என்றால் சரிதான்.

(2) எனக்கு எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் 07.06.1998 ம் தேதி திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு முன்பு

எனது கணவர் எனக்கு உறவினறா என்றால் ஆமாம். திருமணத்திற்கு முன்பு நான் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் ஆண்டியூர் ஆகும். நான் கீழ்மத்தூரில் எப்போது இருந்து குடியிருந்து வருகிறேன் என்றால் 1998 ல் இருந்தே கீழ்மத்தூரில் தான் இருந்து வருகிறேன், எனது கணவர் மட்டும் வேலை சம்பந்தமாக சென்னை சென்று வருவார்.

(3) எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1 மகள் மட்டும், அவருக்கு என்ன வயது என்றால் தற்போது 25 ஆகிறது. அவர் என்ன படித்துள்ளார் என்றால் பி.எஸ்சி கணிதம் படித்துள்ளார். அவருக்கு திருமணம் ஆகவில்லை. 5ம் பிரதிவாதி எங்கு படித்தார் என்றால் பள்ளிக்கூடத்தில் ஆண்டியூரிலும் கல்லூரி படிப்பை குரும்பேரியில் படித்தார், கல்லூரி பெயர் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் கீழ்மத்தூரில் இருந்து வருகிறேன். எனது ஆதார் அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றில் விலாசமானது கீழ்மத்தூர் என்று தான் உள்ளதா என்றால் ஆமாம்.

(4) எனக்கு திருமணம் ஆன பின்பில் இருந்து நானும் எனது கணவரும் சென்னையில் தான் வசித்து வந்தோம் என்றும் தற்போதும் சென்னையில் தான் வசித்து வருகிறேன் என்றும் கீழ்மத்தூரில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி பள்ளி மற்றும் கல்லூரி படித்தது சென்னையில் தான் என்றும் வழக்கிற்காக ஆண்டியூரில் படித்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(5) எனது மாமனார் மற்றும் மாமியார் பெயர்கள் என்னவென்றால் திருப்பதி மற்றும் பெரியதாய் ஆகும். பெரியதாயின் தந்தை பெயர் என்னவென்றால் குழந்தை என்ற மாக்கான் ஆகும்.

(6) வழக்கு 1ம் இனம் மற்றும் 2ம் இன சொத்துகள் ஆதியில் குழந்தை என்ற மாக்கான் உடைய பூர்வீக சொத்துக்கள் என்றால் சரியல்ல. **சர்வே எண்.125/4டி** சொத்தானது குழந்தை என்ற மாக்கான் பெரியதாயிக்கு கொடுத்த சொத்து என்றால் சரிதான். பெரியதாய் பெயரில் பட்டா இருந்து அவர் இறந்த பிறகு 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரிகளில் வாரிசுகள் என்ற அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். **சர்வே எண்.125/4டியும் சர்வே எண்.13/4பி** சொத்துக்கள் ஆதியில் குழந்தை என்ற மாக்கானுக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் சரியல்ல. வழக்கு 2ம் இன சொத்தை குழந்தை என்ற மாக்கான் திருவேங்கட கவுண்டருக்கு கொடுத்து அவருடைய வாரிசு என்ற அடிப்படையில் ஜெயராமனுக்கு வந்து பிறகு வாதி பெயரில் தானசெட்டில்மெண்டு எழுதியதன் மூலம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

(7) வாதியின் தாத்தாவிற்கு எழுதி கொடுக்கும் பொழுது 2ம் இன சொத்திற்கு உண்டான சகல உரிமையும் சேர்த்து தான் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு எந்த திசையில் தார் ரோட்டில் இருந்து வழி வருகிறது என்றால் மேற்கு பக்கத்தில் உள்ளது. மேற்கு பக்கத்தில் உள்ள வழியானது என்ன அளவுகள் என்றால் அடி விவரம் தெரியாது, இருசக்கர வாகனம் செல்லும் அளவிற்கு வழி உள்ளது, டிராக்டர் போன்ற வாகனங்கள் செல்ல முடியுமா என்றால் முடியும். மேற்படி

வழியானது எனது திருமணத்திற்கு முன்பு இந்தே இருந்ததா என்றால் இருந்தது நடை பாதையாக இருந்தது. பிறகு தான் பெரியதானது.

(8) எங்களது வீட்டை தாண்டி எத்தனை வீடுகள் உள்ளது என்றால் வாதியின் வீடு உள்ளது மேலும் 2 வீடுகள் உள்ளது. எனது திருமணத்திற்கு முன்பு இருந்தே மேற்படி வழியை பயன்படுத்தி தான் வாதியும் மற்ற வீட்டு காரர்களும் சென்று வந்து கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வழியானது எங்கள் வீட்டை தாண்டி எங்களுக்கு பாத்தியப்பட்ட கிணற்றிற்கும் மற்றும் வாதி மற்றும் மற்ற வீடுகளுக்கும் செல்கிறது என்றும் அதனை பயன்படுத்தி தான் வாதி அவரது வீட்டிற்கு சென்று வந்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல.

(9) வாதி டிராக்டர் வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வாதி டிராக்டர் வைத்துள்ளார் என்றும் அதனை பயன்படுத்தி தான் 1ம் இன சொத்தின் வழிப்பாதையை பயன்படுத்தி அவரது வீட்டிற்கு தண்ணீர் எடுத்து சென்று பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. **சர்வே எண்.125/4டி** யின் செக்குபந்தி விவரம் என்னவென்றால் கிழக்கில் பண்ணீர் மற்றும் கமலநாதன் நிலம், ராஜா, வைரம் ஆகியோர்கள் நிலம், மேற்கில் கோவிந்தராஜ் நிலம், வடக்கில் ஜெயராமன் மற்றும் வெங்கடேசன் நிலம், தெற்கில் ராஜா மற்றும் வைரம் நிலம் மற்றும் வீடு உள்ளது.

(10) நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்துக்களை பார்வையிட வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் அளக்கும் பொழுது இருந்தேனா என்றால் இல்லை, மருத்துவ மனையில் இருந்தேன். நீதிமன்ற ஆணையர்

வழக்கு சொத்துக்களை பார்வையிடும் பொழுது வழியை பற்றி குறிப்பிட்டுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது.

(11) எனது வீட்டிற்கு எந்த திசையில் கிணறு உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. மேற்படி கிணறானது வெயில் காலத்தில் வற்றிவிடும் என்றால் சரியல்ல. அவ்வாறு வெயில் காலத்தில் வாதி தான் அவரது டிராக்டரில் எங்களுக்கு தண்ணீர் விநியோகித்து வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு ஒரு முறை தண்ணீர் கேட்ட போது வாதி அவசர தேவைக்காக மறுத்துவிட்டார் என்றும் அதனால் பிரச்சனை ஏற்பட்டு வாதி சென்று வரும் வழிப்பாதையை மறித்து பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல, எங்களிடம் இரண்டு போர்கள் உள்ளது அதனால் தண்ணீர் வாங்க தேவையில்லை.

(12) இந்த வழக்கில் எதிர்வழக்குரை எனது கணவர் தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் **சர்வே எண்.125/4 டி** ல் இரண்டு போர்கள் உள்ளது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, எதிர்வழக்குரையில் 9 வது பத்தியில் போர் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளார். **சர்வே எண்.125/4 டி** ல் போர்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. எந்த சர்வே எண்ணில் நான் சொல்வது போல் போர் உள்ளது என்றால் சர்வே எண் தெரியாது.

(13) வாதியின் வீட்டிற்கும் எங்களது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 200-300 அடி இருக்கும். எங்கள் வீட்டில் இருந்து தார் சாலைக்கு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 200 அடி இருக்கும். தார் சாலையில் இருந்து வாதியின் வீட்டிற்கு 400-500 அடி இருக்குமா

என்றால் 500 அடிக்கு மேல் இருக்கும். மேற்படி தார் ரோடானது எங்கிருந்து செல்கிறது என்றால் மத்தூரில் இருந்து காரப்பட்டு செல்லும் ரோடாகும். வாதியின் வீட்டிற்கு வேறு எங்கிருந்தாவது தார் ரோடு வசதி உள்ளதா என்றால் கிழக்கு பக்கத்தில் மண் சாலை உள்ளது. மேற்படி மண் சாலை யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பொதுவான சாலை ஆகும், வெங்கடேசன் நிலத்தில் இருந்து பண்ணீர் நிலத்தின் வழியாக சென்று மேற்படி மண் சாலைக்கு செல்ல முடியும். மண் சாலையில் இருந்து பண்ணீர் நிலமும் பண்ணீர் நிலத்தை தாண்டி தான் வெங்கடேசன் நிலம் உள்ளதா என்றால் ஆமாம். பண்ணீர் நிலம் எவ்வளவு விஸ்த்தீரணம் என்றால் 2 1/2 ஏக்கர் இருக்கும். நான் சொல்லும் மண் சாலையானது பண்ணீர் நிலத்திற்கு முன்பு நின்று விடுகிறது என்றால் சரிதான். வெங்கடேசன் வீட்டில் இருந்து மண் சாலைக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 600–700 அடிகள் இருக்கும். மண் சாலையில் தார் சாலை எவ்வளவு தூரம் என்றால் சுமார் ½ கி.மீ இருக்கும். வெங்கடேசன் மேற்சொன்ன மண் சாலைக்கு செல்ல வேண்டும் என்றால் பண்ணீர் அனுமதித்தால் தான் செல்ல முடியும் என்றால் சரிதான். மண் சாலை எவ்வளவு அகலம் உள்ளது என்றால் டிராக்டர், வண்டி செல்லும் அளவிற்கு இருக்கும். பண்ணீர் 2 ½ ஏக்கர் நிலத்தில் என்ன விவசாயம் செய்து வருகிறார் என்றால் கரும்பு, மஞ்சள், வாழை பயிர் செய்து வருகிறார். அவ்வாறு பயிர் செய்திருக்கும் போது அதில் சென்று வர முடியாது என்றால் சரிதான், ஆனால் வாதி அதை தான் பயன்படுத்தி வருகிறார். தார் ரோட்டில் இருந்து வாதி வீடானது 400 அடி தூரம் தான் என்றும் 1ம் இன சொத்தின் வழிப்பாதையின் வழியாக தான் வாதி டிராக்டர்

வாங்கி கொண்டு சென்று பயன்படுத்தி வந்தார் என்றும் நாங்கள் தான் அதை தடுத்து இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல. **வா.சா.ஆ.9** காண்பிக்கப்பட்டு, தார் ரோட்டில் இருந்து வாதியின் வீடு வரை வழி செல்கிறது என்றால் சரியல்ல. எங்கள் வீடு வரை தான் வருகிறது, வாதி வழக்கிற்காக தயார் செய்த ஆவணம் ஆகும். நான் சொல்வது போல் **வா.சா.ஆ.9** ஆவணம் வாதி தயாரித்த ஆவணம் இல்லை என்றும் **வா.சா.ஆ.9** ல் வாதி வீடு வரை செல்லும் வண்டி வழி பாதையானது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதனை பயன்படுத்தி தான் வாதி சென்று வந்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. **வா.சா.ஆ.9** புல வரைபடம் யூடீஆர் முன்பு உள்ள படம் என்றும் யூடீஆரில் பட்டா வழங்கும் சமயத்தில் வழி பாதையை மறைத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் பட்டா ஏற்படுத்தி கொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

(14) எப்போது 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்படுத்தப்பட்டது என்றால் எனது மாமியார் 2008 ல் இறந்த பிறகு ஏற்பட்டது. **வா.சா.ஆ.9** 20.02.1986 தேதியில் வரையப்படும் பொழுது வழி காட்டப்பட்டுள்ளது என்றும் அதன் பிறகு தயாரிக்கப்பட்ட புல வரைபடத்தில் வழி காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு மேற்படி வழியை தவிர அவரதுவீட்டிற்கு செல்வதற்கு எந்த வழியும் இல்லை என்றும் பிரதிவாதிகள் நாங்கள் அவருக்கு வழியை மறுத்து இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

(15) நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் எங்களது வீட்டிற்கு பின்னால் வாதியின் வீடு வரை வழி செல்கிறது என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல, வீட்டிற்கும், கிணற்றிக்கு செல்லும்

வழி மட்டும் தான் உள்ளது. எங்களது கிணறுக்கும் வாதியின் நிலத்திற்கும் இடையே ஒரே ஒரு வரப்பு தான் உள்ளது என்றால் சரிதான், கிணற்றல் இருந்து வரப்பை தாண்டி தான் வாதியின் நிலம் வரும் என்றால் சரிதான். வாதியும் மற்றும் இரண்டு நபர்களின் வீடுகளும் 30-40 வருடங்களாக உள்ளது என்றால் சரிதான். 30-40 வருடங்களுக்கு மேலாக வாதி எங்களது வீட்டிற்கு அருகில் செல்லும் வண்டி வழி பாதையை தான் பயன்படுத்தி சென்று வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

(16) நான் சொன்ன மண் சாலை எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் 30 வருடங்களுக்கு மேலாக இருக்கும். நான் சொல்வது போல் மண் சாலை 30 வருடங்களாக இல்லை என்றும் நான் சொல்வது போல் 30 வருடங்களாக இருந்திருந்தால் அரசாங்கத்தால் தார் சாலை அமைந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மண் சாலையானது பண்ணீர் அவரது நிலத்தில் இருந்து கரும்பு மற்றும் பயிர் எடுத்து செல்வதற்காக அமைத்துள்ளார் என்றும் அது பொது பாதை இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் அது பொது பாதை இல்லை என்று அவ்வாறு இருந்திருந்தால் வெங்கடேசன் நிலம் வரை வரும் என்று சொன்னால் சரியல்ல.

(17) நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் 1ம் இன சொத்தை தவிர வேறு வழி இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு 1ம் இன சொத்தின் வழியாக செல்ல அத்தியாவசிய வசதி உரிமை உள்ளது என்றும் அதை நாங்கள் மறுத்து வாதியை தடுத்ததால் அவரால் அவது வீட்டிற்கு வண்டி வாகனம் கொண்டு செல்லமுடியவில்லை என்றால் சரியல்ல, நாங்கள் எப்போதும் தடுத்ததில்லை, அவர் வந்ததில்லை.

(18) எனக்கு திருமணம் ஆனதில் இருந்து நான் சென்னையில் தான் குடியிருந்து வருகிறேன் என்றும் வழக்கு சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல, நான் இங்கு தான் குடியிருந்து வருகிறேன்.

(19) **குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sdxxx/-

District Munsif
Uthangarai